සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**Department of Samurdhi Development**

කාන්තා, ළමා කටයුතු සහ සමාජ ආරක්ෂණ අමාත්‍යාංශය - සමාජ ආරක්ෂණ අංශය

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - சமூக பாதுகாப்பு பிரிவு

**Ministry of Women, Child Affairs and Social Security – Social Security Division**

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல DSD/HO/05/MF/08/01/චක්‍ර<br>My No | ඔබේ අංකය<br>உமது இல ..........................................<br>Your No | දිනය<br>திகதி 2024.07.25<br>..........................................<br>Date |

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றறிக்கை இலக்கம் - 2024 /11**

**அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிக் கட்டுப்பாட்டுச் சபை / வங்கிச் சங்க நிறைவேற்று குழுத் தலைவர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்.**

**<u>சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்கங்களின் இலாப ஒதுக்கீட்டிற்கான புதிய விகிதங்களை அறிமுகம் செய்தல்.</u>**

01. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்கள் வருடாந்தம் உழைக்கும் இலாபத்தினை ஒதுக்கீடு செய்வதற்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ள இலாப ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் ஒதுக்கிட்டு விகிதங்களில் மாற்றங்களை செய்வதற்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்க முகாமைத்துவ சபையின் தீர்மான இலக்கம் 2024/130/07 இன் ஊடாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

02. இப் புதிய ஆலோசனைகளை 2024 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்துவதற்கும், மேலும் கடந்த காலங்களில் 2020, 2021, 2022 , மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கும் இப்புதிய ஒதுக்கீட்டு விகிதங்களுக்கு அமைய இலாப ஒதுக்கீடுகளை மீளச் சீராக்கம் செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

03.சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் புதிய இலாப ஒதுக்கீடுகளும் மற்றும் அதற்கான விகிதங்களும்.

| இலாப பகிர்வு கணக்கு | புதிய விகிதங்கள் (%) |
|---|---|
| தேக்கி வைத்த இலாப நட்ட கணக்கு | 50% |
| பங்காளர்களுக்கு செலுத்த வேண்டிய பங்கிலாபக் கணக்கு | 25% |
| பொது நலனோம்பல் நிதிய கணக்கு | 5% |
| ஊழியர் ஊக்குவிப்பு கொடுப்பனவு கணக்கு | 12 % |
| சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்திற்கு ஒதுக்கிய கணக்கு | 1% |
| சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சமாசத்திற்கு ஒதுக்கிய கணக்கு | 1% |
| கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு கணக்கு | 4% |
| ஊழியர் நலனோம்பல் மற்றும் பயிற்சி கணக்கு | 2 % |
| | 100% |

04.சமுர்த்தி வங்கிப் பணிக் குழுவினருக்கு ஒதுக்கிய 12% ஊழியர் ஊக்குவிப்பு கொடுப்பனவை பகிர்ந்தளித்தல்.

| பதவி | புதிய விகிதம் (%) |
|---|---|
| முகாமையாளர் | 12% |
| வங்கியின் உதவி முகாமையாளர் | 10% |
| ஏனைய வங்கிப் பணி குழுவினர் | 22% |
| வலய உதவியாளர் (களக்கடமை) | 6% |
| களக்கடமை பணிக் குழுவினர் (கிராம சேவகர் பிரிவுகளில்) | 50% |
| | 100% |

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) | ප්‍රධාන ගණකාධිකාරී | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) | කාර්යාලය |
|---|---|---|---|---|---|
| | பணிப்பாளர் தலைமையதிபதி | பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்) | பிரதான கணக்காளர் | பணிப்பாளர் (குறு நிதி ) | அலுவலகம் |
| | Director General | Director (Admin & Establishment) | Chief Accountant | Director ( Micro Finance) | Office |
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | Hot Line :0112-889007 | | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |

05. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் இலாப ஒதுக்கீடுகள் மற்றும் புதிய வீதங்கள்.

| இலாப பகிர்வு கணக்கு | இலாப பகிர்வு கணக்கு |
|---|---|
| தேக்கி வைத்த இலாப நட்ட கணக்கு | 50% |
| பங்காளர்களுக்கு செலுத்த வேண்டிய பங்கிலாபக் கணக்கு | 2% |
| பொது நலனோம்பல் நிதிய கணக்கு | 30% |
| சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்திற்கு ஒதிக்கிய நிதிய கணக்கு | 8% |
| ஊழியர் ஊக்குவிப்பு கொடுப்பனவு கணக்கு- | 10% |
| | 100% |

06. சமுர்த்தி வங்கிச் சங்க பணிக் குழுவினருக்கு ஒதுக்கிய 10% ஊழியர் ஊக்குவிப்பு கொடுப்பனவை பகிர்ந்தளித்தல்.

| பதவி | புதிய விகிதம் ( %) |
|---|---|
| முகாமையாளர் | 18 % |
| உதவி முகாமையாளர் | 15 % |
| கருத்திட்ட முகாமையாளர் | 15% |
| ஏனைய பணி குழுவினர் | 52 % |
| | 100% |

07. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்கம் ஏதாவது ஒரு ஆண்டில் நஷ்டம் அடைந்திருப்பின் சமுர்த்தி வங்கி நெறிப்படுத்தல் ஆலோசனை கையேட்டிலக்கம் - 12 இற்கு அமைய முழுமையான நஷ்டத்தினையும் தேக்கி வைத்த இலாப நட்ட கணக்கிற்கு மாற்றி உரிய கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

08. ஒதுக்கங்களுக்காக புதிதாக அறிமுகம் செய்துள்ள ஒதுக்க கணக்குகளுக்கான புதிய பொதுப் பேரேட்டு கணக்குகளை ஆரம்பிப்பது மற்றும் அதற்கான குறியீட்டு இலக்கங்களை வழங்கும் செயற்பாடுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

09. 2020, 2021, 2022, மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கங்களை மீள புதிய விகிதங்களுக்கு அமைய ஒதுக்கி கொள்வதற்கும் மற்றும் சீராக்கம் செய்யப்பட்ட ஒதுக்க கணக்குகளில் உள்ள நிதியத்தினை ஏனைய கணக்குகளுக்கு மாற்றம் செய்தல் தொடர்பாக கணினி மென்பொருள் மற்றும் Manual முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் எதிர்காலத்தில் வழங்கப்படும். அதுவரை புதிய சீராக்கங்கள் எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

10. 2020 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு தயாரிக்கப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிக் கூற்று அறிக்கைகளுக்கான அனுமதி மற்றும் ஒதுக்கி வைத்த இலாபத்தினை பகிர்தல் தொடர்பான ஆலோசனைகள் விரைவாக தங்களுக்கு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சி.டி. களுஆராச்சி**
பணிப்பாளர் நாயகம்,
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**பிரதிகள் :-**

01. செயலாளர் , மகளிர், சிறுவர் அலுவலக மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - தகவலுக்காக
02. மாவட்ட செயலாளர்/ மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் நாயகம் - தகவலுக்காக
03. பிரதான உள்ளக கணக்காய்வாளர், சமு.அபி.திணைக்களம் - உ.ந.பொ.
04. மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், - உ.ந.பொ
05. பிரதேச செயலாளர் பிரதேச செயலகம் - உ.ந.பொ
06. மாவட்ட பிரதி /உதவி பணிப்பாளர்கள் - உ.ந.பொ.
07. .தலைவர் உட்பட பணிப்பாளர் சபையினர் ,சமுர்த்தி வங்கிச் சமாசம் - தகவலுக்காக.

Translated by:
I . Aliyar
District Director (R)